தலைப்பு 300 - உணவு ஆணையாளர் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 300 - உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் ஒள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து உணவு ஆணையாளர் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்ததமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையயை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது உணவு ஆணையாளர் திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக

மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு

அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) மீண்டுவரும் செலவுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
பெறுமதி சேர் வரியினைக் கணக்கீடு செய்யும் போது உள்ளீட்டின் மீதான வரியினையும் வெளியீட்டின் மீதான வரியினையும் எதிரீடு செய்து தேறிய பெறுமதி சேர் வரி ரூபா 13,807,723 இனை நிதிச் சொத்துக்களில் காட்டுவதற்குப் பதிலாக நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளீட்டின் மீதான பெறுமதி சேர் வரி ரூபா ரூபா 34,952,232 மீண்டுவரும் செலவின் கீழும் வெளியீட்டின் மீதான பெறுமதி சேர் வரி ரூபா 21,144,509 வருமானம் அற்ற பெறுவனவின் கீழும் காட்டப்பட்டிருந்தது.	எதிர்வரும் காலங்களில் VAT வரியின் உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்குமிடையேயான வித்தியாசத்தினை நிதி நிலைமை தொடர்பான கூற்றில் காட்டுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	பெறுமதி சேர் வரி சொத்து அல்லது பொறுப்பினை சரியாக அடையாளங்கண்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுதல் வேண்டும்.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கு தொடர்பான கணக்கிணக்க கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(i)	அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணங்கள் பீ கணக்கின் திணைக்கள ஏடுகளின் பிரகாரமும் திறைசேரி ஏடுகளின் பிரகாரமும் காணப்பட்ட ரூபா 332,249 மீதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.	ரூபா 332,249 வித்தியாசம் தொடர்பாக பழைய கோவைகளையும் ஏடுகளையும் பரீட்சித்து பார்த்த போது 2000 ஆம் ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட வித்தியாசம் அடையாளங்காணப்பட்டுள்ளது.	முற்பணங்கள் பீ கணக்கின் மீதியானது திறைசேரி ஏடுகளின் பிரகாரமான மீதியுடன் ஒப்பீடு செய்தல் வேண்டும்.
(ii)	சேவையை கைவிட்டுச் சென்ற 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 706,935 கடன் மீதியில் 03 உத்தியோகததர்களின் ரூா 366,160 கடன் மீதி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்டவைகளாகவும், 04 உத்தியோகத்தர்களின் ரூபா 168,695 கடன் மீதி 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழையவைகளாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதியினை அறவீடு செய்வதற்காக தேவையான சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தபட்டுள்ளது. இன்னுமொரு கடன் அவரின் பிணையாளரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மிகுதியான 06 கடன் மீதிகள் தொடர்பாக தனிப்பட்ட கோவைகளை தேடிக்கண்டு பிடிக்க முடியாததனால் எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகளுக்காக வியாபார, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் மூலம் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.	கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் வடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டதாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனனால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
11 செலவு விடயங்களுக்கான திருத்திய பாதீட்டில் 53 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான சேமிப்புக்கள் காணப்பட்டதனால் நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க மதிப்பீடானது முடியுமான அளவிற்கு சரியாகவும் முழுமையாகவும் தயாரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.	நிதி ஏற்பாடு போதியல்லாத 06 செலவு விடயங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் ஏற்பட்டிருக்காத 05 செலவு விடயங்களிலிருந்து நி.பி 66 இன் பிரகாரம் நிதி ஏற்பாடு மாற்றப்பட்டதனால் தொடக்க மதிப்பீட்டிற்கும் திருத்திய மதிப்பீட்டிற்குமிடையே வித்தியாசம் ஏற்பட்டுள்ளது.	செலவு மதிப்பீட்டினை முடியுமான அளவிற்கு சரியாகவும் முழுமையாகவும் தயாரித்தல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
மீளாய்வாண்டிற்கான ரூபா 2,132,706 பொறுப்புக்களானது பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருககவில்லை. மேலும் இரண்டு செலவு விடயங்கள் சம்பந்தமாக சேமிப்புக்களை மிகைத்து ரூபா 460,575 கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது.	நிதிப்பிரமாணம் 115(2) இற்கு இணங்க பொறுப்புக்களை மார்ச் 31 ஆந் திகதி வரை செலுத்துவதற்கான இயலுமை காணப்பட்டதனால் அதன் பின்னர் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களுடனான வவுச்சர்களை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	அனைத்து பொறுப்புக்களையும் சரியாக பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டுதல் வேண்டும். நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்படுதல் தொடர்பாக கவனத்துடன் பொறுப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் தேவைப்படும் வேளைக்குள் தயாரிக்கப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் சான்றுடுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனம் தொடர்பான ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அறிக்கையின் 4.4 ஆம் பந்தியில் குறிப்பிட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் காரணமாக அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கையானது வரிசை அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	உள்ளகக கணக்காய்வு செயற்பாடுகளை முறைப்படியாக இமுல்ப்பத்துவதற்காக வினைத்திறனான நடைமுறை உள்ளது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்க அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	2024 மார்ச் 18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இத்திணைக்களத்தினை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதனால் இப்பதவியினை உருவாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படாத போதிலும் பதவியினை அங்கீகரித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு உள்ளக கணக்காய்வாளரினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

அவதானிப்புக்கள்				கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு		பெறுமதி	இணக்கமின்மை		
		ரூபா			
(அ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4, 4.2.5 மற்றும் 4.4 ஆம் பிரிவுகள்	303,749	ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 10 ஆண்டுகளை மிகைத்த ரூபா 149,619 இடர் கடன் மீதியினை திரண்ட ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடை பணத்திலிருந்து அல்லது மாதாந்த ஓய்வூதியம மற்றும் உரிய படிகளிலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 154,130 கடன் மீதியை அவர்களின் வாரிசுக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள எந்த ஒரு பணத்திலிருந்தும் கழிக்குமாறு	ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளும் பிரதேச செயலகத்திற்கு கடன் மீதியை அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக 2025 சனவரி 24 ஆந் திகதி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மரணமடைந்த உத்தியோகத்தர்களின் மீதியை அறவீடு செய்யும் இயலமை பற்றி அரசாங்க நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளருக்கு 2025 மார்ச் 20 அந் திகதி கடிதம் அனுப்பப்பட்டது.	தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

				ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டிக் கொள்ளப்படவில்லை.		
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை					
	(i)	நிதிப்பிரமாணம் 110	-	திணைக்களத்தினால் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு முறைப்படியாக பேணப்பட்டிருக்கவில்லை.	நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணுதல் மேற்கொள்ளப்படும்.	நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டினை நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும்.
	(ii)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப்பிரமாணம் 756(6)	-	2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு 05 மாதங்கள் தாமதமடைந்திருந்தது. மேலும் 2024 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வு அறிக்கை 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கணக்காய்வளார் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பொருள் மீளாய்வு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு முடிவு செய்யுமாறு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மீளாய்வு அறிக்கையினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
	(iii)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க	365,547	வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய	06 கடன் மீதிகளின் தனிப்பட்ட கோவைகளை தேடிக்கண்டு படிக்க முடியாதுள்ளதனா	சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடனை அறவீடு செய்தல் வேண்டும்.

அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நி.பி 113(6)(ஆ)	20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மற்றும் 03 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகள் வரையான காலம் பழமையான மொத்தமாக ரூபா 365,547 கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	ல் 01/2024 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் இடைக்கால ஏற்பாடுகளின் பிரகாரம் 04(i) இலுள்ள வரம்புகளின் கீழ் நடவடிக்கை எடுக்ககூடிய கடன் மீதிகளாக கைவிடுதல் பொருத்தமானது என ஒரு குழுவின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டது. எனினும் கோவைகள் அழிவடைந்தமை கடனை கைவிடுவதற்கான காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க கடனை பதவழிக்கும் இயலுமையை ஆராய்நது பார்ப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

3.5 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 பொது வைப்புக் கணக்குகள் தொடர்பாக ரூபா 191,600,190 மீதி காணப்பட்டது. அந்த மீதியில் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட ரூபா 32,825,394 மீதியும் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட ரூபா 27,031,903 மீதிகளும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 27,442,800 மீதியும் ஆனதுடன் அது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571(2) மற்றும் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வைப்புக்களுக்காக நி.பி 571(2) மற்றும் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வைப்புக் கணக்கினை தீர்த்துவைத்தல் வேண்டும்.

3.6 வங்கி கணக்கு செயற்பாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
வங்கி கணக்கிணக்க கூற்றில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 80 சந்தர்ப்பங்கள் தொடர்பாக அடையாளங்காணப்படாத பெறுவனவுகள் ரூபா 3,120,233 ஆக இருந்ததுடன் அப் பெறுவனவுகளில் 04 ஆண்டுகளிலிருந்து 01 மாதம் வரையான பழைய மீதி காணப்பட்டது. மேலும் தீர்த்து வைக்கப்படாத ரூபா 737,500 ஆன இரண்டு பெறுவனவுகள் காணப்பட்டதுடன் அவை 19 ஆண்டுகளையும் 03 ஆண்டுகளையும் மிகைத்த பெறுவனவுகளாகும்.	நீண்டகாலமாக இந்த வைப்புக்கள் அடையாளம் காணப்படாது வங்கி கணக்கிணக்க கூற்றில் காட்டப்பட்டதனால் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வங்கி கணக்குக் காணப்படுகின்ற யூனியன் பிளேஸ் கிளையின் ஒத்துழைப்புடன் அவற்றினை அடையாளங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	அடையாளங்காணப்படாத பெறுவனவுகளை துரிதமாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
தீணைக்களத்தின் பிரதான செற்பாடுகளாக அடையாளங்காணப்பட்ட ஆசியான் வலய நாடுகளின் ஒத:துழைப்பு அமைப்பின் கொழும்பு பிரகடம் மற்றும் 16 ஆம் கருத்தரங்கின் பிரகாரம் 8,000 மெற்றிக் தொன் விசேட அரிசி ஒதுக்கத்தினை பேணுதல் என்பது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது அதற்காக எந்த ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் எந்த அரிசி ஒதுக்கமும் பேணப்பட்டிருக்கவில்லை.	முன்னைய ஆண்டின் போது 8,000 மெட்ரிக் தொன் அரிசி ஒதுக்கத்தினை பேணுவதற்கு ரூபா 1996 மில்லியன் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் ரூபா 100 மில்லியன் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. அது போதுமானதாக இல்லாதிருந்ததனால் எதிர்பார்த்த அரிசி ஒதுக்கம் பேணப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டினை நிறைவேற்றி குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த பிரதிபலன் பெற்றுக்கொள்ளப்படாமை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) இரசாயனப் பொருட்கள் பயன்படுத்துவதனை குறைத்தல் அல்லது இல்லாமலாக்குதல் மற்றும் இரசாயனப் பொருட்களை பயன்படுத்துவதற்காக செலவு செய்யப்படும் கிரயத்தை குறைத்தல் அல்லது இல்லாமாலாக்குதலினை குறிக்கோளாகக் கொண்டு விஞ்ஞானரீதியான களஞ்சியம் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் உலக உணவு நிகழ்சித்திட்டத்தின் கீழ் உதவியாக கிடைத்து பகிர்ந்தளிக்கப்படும் வரை களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு காணப்பட்ட உணவுக்காக 2024	அக்களஞ்சியத்திலுள்ள பொருட்களின் உரிமை உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டங்களின் ஒத்துழைப்புக்கான கூட்டு செயலகத்திற்கும் உரியது என்பதனால் அவர்களின் அறிவுறுத்தல் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும்.	இரசாயனப் பொருள் பயன்படுத்துவதனை குறைக்கும் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ஆம் ஆண்டின் போது 10 தடவைகள் புகைபிடித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 1,633,372 ஒரு தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க இரசாயனப் பொருட்களைப் பயன்படுத்துதல் மற்றும் அதற்கான செலவுகளை குறைத்தல் ஆகிய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	வெயாங்கொடடை விஞ்ஞானரீதியான 03 களஞ்சியங்கள் மேற்கூறிய நிகழ்சித்திட்டத்தின் கீழ் பெற்ற அரிசி ,பருப்பு, பேரீச்சம் பழம், மரக்கறி எண்ணை ஆகிய உணவுப் பொருட்களை பாடசாலை பிள்ளைகளுக்கும் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கும் வழங்குவதற்காக களஞ்சியப்படுத்தி இருந்ததுடன் அப்பொருட்கள் கிடைத்த காலத்திற்கு இணங்க 2024 நவம்பர் 19 ஆந் திகதியில் 01 ஆண்டு 08 மாதங்களிலிருந்து 08 மாதங்கள் வரையான காலம் களஞ்சசியத்தில் வைக்கப்பட்டிருந்ததனால் பயன்படுத்த முடியாமையின் காரணமாக எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்ற முடியாதிருந்தது.	உலக உணவு அமைப்பின் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒத்துழைப்புககான கூட்டு செயலகத்தின் அறிவுறுத்தலின் அடிப்டையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள்பபட்டது.	களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருட்களின் தரத்தினை அவ்வப்போது பரீட்சிக்க வேண்டியதுடன் அவற்றினை நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குகள் நிர்ணயிக்கப்பட்டவாறு பகிர்ந்தளிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து கணக்கீட்டு உத்தியோகத்தர்களினாலும்	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கை வரிசை அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக	2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் அறிக்கையினை துரிதமாக பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு

	வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் கடப்பதற்கு முன்னர் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் மீளாய்வாண்டிற்கான வரைபு செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிக்கக்களுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது.	வரைபு ஆண்டறிக்கை கணக்குகளுடன் கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2016 ஆம் ஆண்டின் போது வெயாங்கொடை இலக்கம் 06 களஞ்சியமானது ரூபா 3,495,536 செலவு செய்து ஆய்வுகூடமாக மாற்றப்பட்டிருந்தும் அந்த ஆய்வுகூடம் பல ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2024 நவமப்ர் 06 ஆந் திகதி அதில் காணப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் ஏலத்தில் விற்கப்பட்டிருந்தது.	மாதிரிகளை பரீட்சிக்கும் நடவடிக்கைகளைகளுக்கு நேரடியாக பயன்படுத்துகின்ற உபகரணங்களைத் தவிர பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற நிலயையில் காணப்பட்ட பழைய உபகரணங்களை மாத்திரம் ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	ஆய்வுகூடத்தினை எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக பயன்படுத்துவதற்கு திட்டமிட்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	வெயாங்கொட களஞ்சிய தொகுதியில் காணப்பட்ட பாலம் தராசு பல ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. அதன் துணைக் கருவிகள் உள்ளடங்கலாகியுள்ள அறையின் கூரை உடைந்து காணப்படுவதுடன் அது துணைக் கருவிகளின் பாதுகாப்பிற்கும் உள்ளமைக்கும் சவாலாக இருந்தது.	2025 பாதீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி எற்பாட்டின் மூலம் திருத்தம் செய்தலினை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	பாலம் தராசினை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது ஏனைய தரப்பினர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	366 வீடுகளைக் கொண்ட தானியகம வீட்டுத் தொகுதிக்குரிய காணியை பொறுப்பேற்காது 43 ஆண்டுகள் கடந்திருந்ததுடன் இதன் அளவீட்டு நடவடிக்கைகள் 2021 யூலை 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டு 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. வீட்டுத் தொகுதியிலுள்ள 28 வீடுகள் 01 ஆண்டிலிருந்து 14 ஆண்டுகள் வரையான காலம் உடைந்த நிலையில் காணப்பட்டதுடன் அவற்றினை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. வீட்டுத் தொகுதிக்குரிய காணியை பொறுப்பேற்றதற்கும் உடைந்த வீடுகளை திருத்தம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டது.	வீட்டுத் தொதிக்குரிய காணியை பொறுப்பேற்பதற்கும் உடைந்த நிலையில் காணப்படும் வீடுகளை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

4.5 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	உணவு முத்திரை, மண்ணெண்ணை முத்திரை, அரிசி, மாவு, சீனி மற்றும் ஏனையவைகளாக 156 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கிய கடன் தொகையிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 154,855,604 மீதி அறவிட	கூட்டுறவு சங்கங்களால் பணத்தை செலுத்துதல் முறைப்படியாக இடம்பெறவில்லை எனவும் எதிர்வரும் காலங்களில் கடன் தொகையை அறவீடு செய்வதற்குரிய நடைமுறையினை தயாரிப்பதற்கு குறித்துக்	அறவிடப்படாத கடன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	வேண்டிக் காணப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இக்கடன் பணம் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். இன்று வரை ஒரு கூட்டுறவு சங்கத்திடமிருந்து மாத்திரம் தவணைப்பணம் அறவிடப்பட்டு வருவதுடன் ஏனைய சங்கங்களின் கடன் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கொள்ளப்பட்டது.	
(ஆ)	10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற 225 களஞ்சிய பொறுபாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய மிகைக் கட்டண பெறுமதி 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 45,721,968 ஆக இருந்ததுடன் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மிகைக் கட்டணம் அறவீடு செய்யப்படாத களஞ்சிய பொறுப்பாளர்களுக்கு மத்தியில் எந்த வகையிலேனும் அறவீட்டினை மேற்கொள்ள முடியாத பொறுப்பாளர்களின் மிகைக்கட்டணத்தை பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு குறிததுக் கொள்ளப்பட்டது.	மிகைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு முறையான ஒரு வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் செலுத்தாத மிகைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	உலக உணவு நிகழ்சித்திட்டத்தின் கீழ் கிடைத்துள்ள பேரீத்தம் பழ இருப்பினை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் விடுவிப்பதற்கு முடியாமையின் காரணமாக ரூபா 398,909 தாமதக் கட்டணம் திணைக்களத்தினால் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.	தாமதக் கட்டணத்தை மீண்டும் எங்களுக்கு செலுத்தமாறு விடுவிக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு பதிலாக துறைமுக அதிகாரசபையிடமிருந்து தெரியப்படுத்தப்பட்டதானது ரூபா 398,909 தண்டப்பணம் அல்லாது அறவிடப்படுகின்ற நில வாடகையாகும்.	உரிய கட்டணத்தினை செலுத்தியதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களை அடையாளங்கண்டு அத்தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஈ)	உலக உணவு நிகழ்சித்திட்டத்தின் கீழ் கிடைத்துள்ள 297 கிலோகிராம் அரிசி 3,385 கிலோகிராம் பருப்பு, 152 கேன் மரக்கறி எண்ணை என்பன கால்நடை உணவாக கால்நடை உணவு உற்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன்	பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலையில் இல்லாத உலக உணவு நிகழ்சித்திட்டத்திற்குரிய உணவுப் பொருட்களை கால்நடை உணவாக வழங்குதல் அல்லது அழித்தல் மேற்கொள்ளப்படுதல் என்பதனை தீர்மானித்தல்	உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளின் பிரகாரம் உணவுப் பொருட்களை நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய

இன்னும் 40 கிலோகிராம் அரிசி 600 கிலோகிராம் பருப்பு மற்றும் 21 கேன் மரக்கறி எண்ணை என்பன அன்பளிப்புச் செய்தல்களாக அடையாளம் காணப்பட்டிருந்தது.	உலக உணவுத் நிகழ்சித்திட்டத்தின் வழிகாட்டிக் கோவைக்கு இணங்கியதாகும்.	போதிலும் அவ்வாறு செய்யாததன் மூலம் கவனயீனத்தின் காரணமாக நட்டம் ஏற்பட்டுள்ளதா என்பதனை பரீட்சித்தல் வேண்டும்.

4.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
(அ)	திணைக்களத்தின் களஞ்சிய கட்டிடங்களை வெளித்தரப்பினர்களுக்கு குத்தகைக்கு வழங்கும் போது உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகைதாரரினால் நீர், தொலைபேசி, மற்றும் மின்சார இணைப்புக்களுக்கான விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்த வேண்டிய போதிலும் 08 நிறுவனங்கள் தொடர்பாக 50 மாதங்களிலிருந்து 02 மாதங்கள் வரையான கால விச்சிற்குரிய ரூபா 35,719,639 ஆன மின்சார வலைப் பட்டியல்களும் 47 மாதங்களிலிருந்து 02 மாதங்கள் வரையான கால வீச்சுக்குரிய ரூபா 1,706,867 ஆக நீர்ப்ப பட்டியல்களுமாக மொத்தமாக ரூபா 37,426,506 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	பூரணப்படுதாத விலைப்பட்டியல்களை விரைவாக பூரணப்படுத்துமாறு தெரிவித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்..	செலுத்தப்பட்டுள்ள விலைப்பட்டியல்களுக் காக கிடைக்க வேண்டிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும
(ஆ)	2018 யூலை 31 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பழங்கள், மரக்கறி, வெங்காயம் மற்றும் ஏனைய பொருளாதார ரீதியாக இலாபகரமான பயிர்களின் விலைத் தளம்பல்களைக் குறைப்பதற்காக 5,000 மெட்ரிக் தொன் இயலளவினைக் கொண்ட வெப்பத்தைக் கபட்டுப்படுத்தும் களஞ்சிய வசதியினை ஸ்தாபிப்பதற்காக அங்கீகாரம்		

வழங்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i)	2019 யூன் 26 ஆந் திகதி உணவு ஆணையாளர் ஒப்பந்தக்காரர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 06 மாதங்களில் முடிவுறுத்தப்பட வேண்டிய செயற்திட்டங்களுக்கு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட் காலம் கடந்திருந்தும் 2025 ஏப்ரல் இறுதி வரையும் வேலையை முடிவு செய்து ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வறே களஞ்சியத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் முகாமைத்துவத்திற்கு ஒரு நிறுவனத்தை தெரிவு செய்வதற்கும் 2024 யூலை 28 மற்றும் 2024 ஆகஸ்ட் 23 ஆகிய இரண்டு திகதிகளில் 06 பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்டு ரூபா 261,287 செலுத்தப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அதற்காக ஒரு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் களஞ்சியத்தைப் பயன்படுத்தும் போது வழங்கப்படுகின்ற கழிவு நீரினை வெளியேற்றுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட ஒரு நடைமுறை கணக்காய்வுத் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய செயற்திட்டம் 2025 யூன் 15 ஆந் தகிதியளவில் பூரணப்படுத்தி ஒப்படைக்கப்படும் எனவும் இல்லலையாயின் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஒப்பந்தக்காரருக்கு தெரிவித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் களஞ்சியத்தின் நடவடிக்கைகளை பேணுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு பொருத்தமான ஒரு நிறுவனத்தை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	செயற்திட்டத்தினை நிர்ணயிக்கப்பட்டவாறு பொறுப்பேற்பதற்கும் முகாமைத்துவத்திற்காக ஒரு நிறுவனத்தை துரிதமாக தெரிவு செய்து செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் வேண்டும்.

(ii)	இந்த நிர்மாணத்திற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் காணியியை பயன்படுத்துவதற்கும் அதன் உரிமையை உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டு 06 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் 2025 ஏப்பரல் 30 ஆந் திகதி வரை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உரிய காணியை பொறுப்பேற்பதற்காக 2024 திசெம்பர் மாதம் ரூபா 21.4 மில்லியன் நகர சபை அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. பொறுப்பேற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.	உரிய காணியை பெறுப்பேற்கும் நடவடிக்கையை துரிதப்படுத்தல் வேண்டும்.
(iii)	2022 ஒக்தோபர் 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட அரசாங்க கணக்குகள் குழுவினால் இக்களஞ்சிய தொகுதிக்காக சூரிய மின்கலத்தை பொருத்துவது தொடர்பாக கவனம் செலுத்துமாறு சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் தற்பொழுது 02 ஆண்டுகளை மிகைத்திருந்தும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சூரிய மின்கலத்தை பொருத்துவதற்காக கவனம் செலுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	அரசாங்க கணக்குகள் குழுவின் சிபாரிசுக்கு இணங்க சூரிய மின்கலத்தை பொருத்தும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும்.
(iv)	முழு கொள்லளவு 5000 மெற்றிக் தொன்னைக் கொண்ட இக்களஞ்சியத்தின் பொருட்களின் நிறையை அளவீடு செய்வதற்காக ஒரு தடவைக்கு 02 மெட்றிக் தொன்னை அளவீடு செய்யக்கூடிய 06 நிலத் தராசுகள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் களஞ்சிய பொருட்களை பிரதான களஞ்சியத்திற்கு அனுப்புவதற்கு முன்னர் குளிரூட்டல் பிரிவில் மற்றும் வழங்குவதற்கு முன்னர்	சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக கவனம் செலுத்துவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள் ளது.	களஞ்சியம் மற்றும் களஞ்சியலளவினைப் போல காலம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி சொத்துக்களை முகாமைதத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வெப்பமாக்குவதற்கு பிந்திய பிரிவில் 4.5 மணித்தியாலங்கள் காலம் அவை வைத்திருக்கப்பட வேண்டிய போதிலும் அந்த 02 பிரிவுகளினதும் கொள்ளளவு 12 மெட்றிக் தொன் அளவில் இருந்ததன் காரணமாக களஞ்சியத்தை முழுமையாக நிரப்புவதற்கு ஆகக் குறைந்தது 83 நாட்கள் அளவிலான நீண்டகாலம் ஏற்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக திணைக்களம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) 2020 ஏப்ரல் 29 ஆந் திகதிய அமைப/20/0722/218/010 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திறந்த சந்தையில் அரிசி தட்டுப்பாடு உருவாகுவதனை தவிர்க்கும் வகையில் நெல் இருப்பினைப் பயன்படுத்தி அரிசியினை தயாரிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக சிறிய மற்றும் மத்திய அளவு அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு துரிதமாக கடன் நிவாரணம் வழங்கும் நிகழ்சித்திட்டத்தின் மூலம் 2020 இலிருந்து 2024 வரை ரூபா 423.7 மில்லியன் கடன் வழங்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i)	உடன்படிக்கையின் (iii) ஆம் பந்தியன் பிரகாரம் கடனைப் பெற் திகதியிலிருந்து 06 மாதங்கள் மிகைப்பதற்கு முன்னர் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு கூட்டுறவு சங்கங்களால் இணங்கி கொள்ளப்பட்டிருந்தும்	தற்பொழுது செலுத்தப்படாத மீதி ரூபா 301.387 மில்லியனாகும்.	கடன் பணததை துரிதமாக அறவீடு செய்வதற்கு அல்லது கடன் பணத்தை செலுத்தாமை சம்பந்தமாக உடன்படிக்கைக்கு இணங்க மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	2025 ஏப்ரல் இறுதியளவில் ரூபா 301.387 மில்லியன் கடன் மீதி செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் போது உடன்படிக்கையின் 3 vii ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு மாதத்திற்கு 1.5 சதவீதபடி தாத கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை .		
(ii)	உடன்படிக்கையின் 1(ii) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்திற்கு இருக்கும் கடனை தீர்த்து வைப்பதற்குரிய அனைத்து சட்ட ரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு முதலாவது தரப்பினரான உணவு ஆணையாளர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் 03 ஆண்டுகள் 07 மாதங்களிலிருந்து 05 மாதங்கள் வரயான காலமாக செலுத்தாது காணப்பட்ட மேற்கூறிய கடன் மீதியை அறவீடு செய்வது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் கடனை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான கடப்பாடு உள்ளதுடன் கடனை துரிதமாக தீர்த்துவைகுமாறு ஒவ்வொரு சங்கத்தின் தலைவருக்கும் PC/09/02/11 ஆம் இலக்க 2024 திசெம்பர் 30 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.	உடன்படிக்கையின் பிரகாரம் கடனை அறவீடு செய்வதற்கு உரிய சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iii)	அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கிய கடனை சுழற்சிக் கடனாக பயன்படுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்படாதிருந்தும் அக்கடனை சுழற்சி கடனாக பயன்படுத்தி இருப்பதனால் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் வழங்கிய 06 மாதங்கள் பூர்த்தியான	பணத்தை அறவீடு செய்வது சம்பந்தமாக காலஎல்லை அல்லது சுழற்சியாக பயன்படுத்துதல் செய்யப்படாமை சம்பந்தமான தகவல்கள் அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்படாத போதிலும் இச்செயற்திட்டம் சம்பந்தமான வழிகாட்டிக் கோவை மற்றும் உரிய நடைமுறைகள்	அமைச்சரவை திர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சுழற்சி கடன் திட்டத்தினை பயன்படுத்துவதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

	உடன் அப்பணத்தை பொதுத் திறைசேரிக்கு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 72,109,209 பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.	திணைக்களத்தினால் தயாரித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என காட்டப்பட்டுள்ளதனால் அதற்கிணங்க அப்பணத்தை சுழற்சியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	
(ஈ)	2024 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2025 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான 02 ஆண்டுகள் காலத்திற்கு உணவுச்சாலை குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 03 மாத தாமதத்தின் பின்னர் 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி குத்தகைதாரருக்கு உணவுச்சாலையை ஒப்படைத்ததன் காரணமாக அந்த 03 மாதங்களுக்கான ரூபா 354,000 குத்தகை வாடகை திணைக்களத்தினால் இழக்கப்பட்டிருந்தது. மேலும் உணவுச்சாலைக்காக 2024 ஏப்ரல் மாதத்திலிருந்து 2024 ஒக்தோபர் மாதம் வரையான 07 மாதங்களுக்கான (வரியுடன்) ரூபா 995,330 வாடகை அறவிடப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகைக்காக அறவிட வேண்டிய தாமதக் கட்டணமும் கணிப்பிடப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் உடன்படிக்கையின் 09 ஆம் பிரிவின் பரகாரம் உணவுச்சாலை வளவில் பயன்படுத்துகின்ற மின்சாரம், தொலைபேசி மற்றும் நீருக்கான விலைப்பட்டியலினை குத்தகைதாரரிடமிருந்து அறவீடு செயவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இதற்கு முன்னர் உணவுச்சாலையை செயற்படுத்தி வந்த குத்தகைதாரரின் நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு அந்த நிறுவனத்தின் பொருட்களை ஏலத்தில் விற்பதற்கு பொருட்களை ஏலத்தில் விற்பதற்கு காலம் எடுப்பதனால் புதிய குத்தகைதாரருக்கு ஒப்படைத்த திகதியிலிருந்து குத்தகை வாடகையை அறவீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. நிலுவை வாடகையை துரிதமாக செலுத்துமாறு குத்தகைதாரருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	நிலுவை வாடகையையும் நிலுவை விலைப்பட்டியல்களையும் துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ)	2024 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தானியகம வீடமைப்புத் தொகுதியில் தற்பொழுது குடியிருக்கும் 121 வீடுகளிலிருந்தும் மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்து பொறுப்பேற்கப்பட்ட 10 வீடுகளில் குடியிருப்பவர்களிடமிருந்தும் மொத்தமாக ரூபா 3,493,567 வீட்டு வாடகயும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற 23 வீடுகளில் குடியிருப்பவர்களிடமிருந்து 2024 யூன் 30 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,552,156 வீட்டு வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவை வாடகையை துரிதமாக அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	நிலுவையான வீட்டு வாடகையை அறவீடு செயவதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை திணைக்களத்தினால் வாடகைக்கு வழங்கியுள்ள 32 களஞ்சியங்கள் மற்றும் வளவிற்காக தனியார் துறையிலுள்ள 15 நிறுவனங்களிடமிருந்து ரூபா 36,634,171 தொகையும், 21 களஞ்சியங்களுக்காக 07 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து ரூபா 75,767,880 தொகையும், உடமையை பெற்றுக்கொள்வதற்கும் நிலுவை களஞ்சிய வாடகையை அறவீடு செய்வதற்கும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள 04 களஞ்சியங்சள் சம்பந்தமாக 04 நிறுவனங்களிடமிருந்து ரூபா 30,751,840 தொகையும், வடகைக்கு வழங்கி மீளப் பொறுப்பேற்கப்பட்டிருந்த 27 களஞ்சியங்கள் சம்பந்தமாக ரூபா 47,121,615 தொகையுமாக ரூபா 190,275,506 நிலுவைக் களஞ்சிய வாடகை அறவீடு செய்யப்பட்டிருக்கவிலலை.	தனியார் நிறுவனங்களிடமிருந்து ரூபா 27,591,117 நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க நிறுவனங்களிடமிருந்து நிலுவைப் பணத்தை அறவீடு செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சதொச நிறுவனத்திற்கு நிலுவை வாடகையை செலுத்தமாறு 2025 ஏப்ரல் 22 ஆந் திகதி தெரியப்படுத்தப்பட்டுள்ள து.	நிலுவையான களஞ்சிய வாடகையை துரிதமாக அறவீடு செய்வதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	தனியார் துறைக்03 களஞ்சிய கட்டிடங்கள் மற்றும் தனியார் அரசாங்க துறையிலுள்ள 02 நிறுவனங்களுக்கு 02 களஞ்சியங்கள் உடன்படிக்கையின்றி வாடகை	தேடிப்பார்த்து பதில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கிறேன்.	முறையான வாடகை உடன்படிக்கையின் அடிப்படையில் களஞ்சியத்தை வழங்குவதற்கும் நிர்ணயிக்கப்பட்ட

	அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் அரசாங்க துறையிலுள்ள 07 நிறுவனங்களுக்கு 43,645 மெட்ரிக் தொன் கொள்ளளவுள்ள 250,701 சதுர அடியான 18 களஞ்சியங்களிள் வாகை அறவிடப்படாதும் எந்த உடன்படிக்கையின்றியும் வழங்கப்பட்டிருந்தன.		வாடகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	2023 ஆம் ஆண்டில் களஞ்சியம் மற்றும் வீடுகளுக்காக அறவிட வேண்டிய ஒட்டுமொத்த நிலுவை வாடகை ரூபா 116,346,863 ஆனதுடன் 2024 ஆம் ஆண்டில் அது ரூபா 196,946,397 வரை ரூபா 80,599,534 ஆல் அதிகரித்திருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதன் அதிகரிப்பு 69 சதவீதமாக இருந்தது.	2023 ஆம் ஆண்டில் களஞ்சியம் மற்றும் வாடகைளுக்காக அறவிட வேண்டிய ஒட்டுமொத்த நிலுவை வாடகை ரூபா 14,818,351 ஆனதுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அது ரூபா 183,450,813 ஆக இருந்ததுடன் அதன் வித்தியாசம் ரூபா 168,632,462 ஆகும். காணப்பட்ட பொருளாதார பிரச்சினை மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைப் பணத்தை செலுத்த தவறியமை என்பன இந்த அதிகரிப்புக்கு காரணமாகும். துரிதமாக வாடகைப் பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவையான சட்ட நடவடிக்கை எடுத்து நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	திணைக்களத்தின் வெயாங்கொட களஞ்சிய தொகுதியில் அமைந்துள்ள 16,330 மெட்ரிக் தொன் கொள்ளளவினைக் கொண்ட 06 களஞ்சியங்கள் 2025 ஏப்ரல் 30 அந் திகதி வரையும் விளைவற்றுக் காணப்பட்டன.˙	நெல் கொள்வனவு செய்தல் மற்றும் பாதுகாப்பு இருப்பினை வைத்திருப்பதன் மூலம் அரிசி விலையின் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டத்திற்கு இணங்க இக்களஞ்சியத்தினை பயன்படுத்துவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.	களஞ்சியங்களின் கொள்ளளவினை பயன்படுத்துவதற்கு தேவையான நடைமுறை தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(ஓ)	கொள்ளளவு 16,920 மெட்ரிக் தொன் ஆன 78,000 சதுர அளவுள்ள பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற 04 கள:ஞசியங்கள் திருத்தம் செய்யப்படாது 04 ஆண்டுகளிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டது.	நெல் கொள்வனவு செய்தல் மற்றும் பாதுகாப்பு இருப்பினை வைத்திருப்பதன் மூலம் அரிசி விலையின் ஸ்திரத்தன்மையை பேணுவதற்காக அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டத்திற்கு இணங்க இக்களஞ்சியத்தினை பயன்படுத்துவதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.	களஞ்சியத்தை பயன்படுத்துவதற்கு பொருத்தமான வகையில் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நல்லாட்சி

5.1 உள்ளக கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**	**சிபாரிசுகள்**
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு உள்ளக கணக்காய்வாளரினை நிமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2024 மார்ச் 18 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க இத்திணைக்களத்தினை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதனா ல் இப்பதவியினை உருவாக்குவது தொடர்பான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும் பதவியினை அங்கீகரித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.	கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு உள்ள கணக்காய்வாளரினை நியமித்து உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. மனிதவளங்கள் முகாமைத:துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
திணைக்களத்தின் அங்கீகரித்த ஆளணியினர் 208 ஆகவும் உள்ளபடியான ஆளணியினர் 53 ஆகவும் இருந்ததனால் 159 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டனர்.	வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக அரசாங்க நிருவாக திணைக்களத்திற்கு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதற்காக உத்தியோகத்தர்கள் வழங்கப்படவில்லை.	திணைக்களதின் செயற்பாடுகளை தடையின்றி நிறைவேற்றுவதற்கு தேவையான ஆளணினரை துரிதமாக சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.